# 20 ஆன்மீக உடல் சார்ந்த இரக்கச்செயல்கள்

பெனடிக்ற் : குரு மரணத்தின் பின் எமக்கு வாழ்வு இருக்கிறதா?

குரு : ஆம், மகனே, கத்தோலிக்கராகிய எமக்கு மரணத்தின் பின் நித்திய வாழ்வு ஒன்று இருக்கிறது.

பெனடிக்ற் : குருவே! நித்திய வாழ்வைப் பெற்றுக்கொள்ள நாம் என்ன செய்ய வேண்டும்?

குரு : மகனே, அயலாரை அன்பு செய்ய வேண்டும். அதற்காக இரக்கச் செயல்களில் ஈடுபடவேண்டும்.

பெனடிக்ற் : குருவே! இரக்கச் செயல்கள் எவை?

குரு : மகனே, இந்த நற்செய்திப் பகுதியை நன்கு அவதானியும். அப்போது உமக்கு விளங்கும்.

31 " வானதூதர் அனைவரும் புடைசூழ மானிட மகன் மாட்சியுடன் வரும்போது தம் மாட்சிமிகு அரியணையில் வீற்றிருப்பார். 32 எல்லா மக்களினத்தாரும் அவர் முன்னிலையில் ஒன்று கூட்டப்படுவர். 33 ஓர் ஆயர் செம்மறியாடுகளையும் வெள்ளாடுகளையும் வெவ்வேறாகப் பிரித்துச் செம்றறியாடுகளை வலப்பக்கத்திலும் வெள்ளாடுகளை இடப்பக்கத்திலும் நிறுத்துவதுபோல் அம்மக்களை அவர் வெவ்வேறாகப் பிரித்து நிறுத்துவார். 34 பின்பு அரியணையில் வீற்றிருக்கும் அரசர் தம் வலப்பக்கத்தில் உள்ளோரைப் பார்த்து, "என் தந்தையிடமிருந்து ஆசி பெற்றவர்களே, வாருங்கள்; உலகம் தோன்றியது முதல் உங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் ஆட்சியை உரிமைப்பேறாகப் பெற்றுக் கொள்ளுங்கள். 35 ஏனெனில் நான் பசியாய் இருந்தேன், நீங்கள் உணவு கொடுத்தீர்கள்; தாகமாய் இருந்தேன், என் தாகத்தைத் தணித்தீர்கள்; அன்னியனாக இருந்தேன், என்னை ஏற்றுக் கொண்டீர்கள்; 36 நான் ஆடையின்றி இருந்தேன், நீங்கள் எனக்கு ஆடை அணிவித்தீர்கள்;

நோயுற்றிருந்தேன், என்னை கவனித்துக் கொண்டீர்கள்; சிறையில் இருந்தேன்,
என்னைத் தேடி வந்தீர்கள்" என்பார். 37 அதற்கு நேர்மையாளர்கள் "ஆண்டவரே,
எப்போழுது உம்மைப் பசியுள்ளவராகக் கண்டு உணவளித்தோம், அல்லது
தாகமுள்ளவராகக் கண்டு உமது தாகத்தைத் தணித்தோம்? 38 எப்பொழுது
உம்மை அன்னியராகக் கண்டு ஏற்றுக் கொண்டோம்? அல்லது ஆடை
இல்லாதவராகக் கண்டு ஆடை அணிவித்தோம்? 39 எப்பொழுதும்
நோயுற்றவராக அல்லது சிறையில் இருக்கக் கண்டு உம்மைத்தேடி வந்தோம்?"
என்று கேட்பார்கள். 40 அதற்கு அரசர், "மிகச் சிறியோராகிய என் சகோதோரர்
சகோதரிகளுள் ஒருவருக்கு நீங்கள் செய்ததையெல்லாம் எனக்கே செய்தீர்கள்
என உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன்" எனப் பதிலளிப்பார். 41
பின்பு இடப்பக்கத்தில் உள்ளோரைப் பார்த்து, "சபிக்கப்பட்டவர்களே,
என்னிடமிருந்து அகன்று போங்கள். அலகைக்கும் அதன் தூதருக்கும் ஏற்பாடு
செய்யப்பட்டிருக்கிற என்றும் அணையாத நெருப்புக்குள் செல்லுங்கள். 42
ஏனெனில் நான் பசியாய் இருந்தேன், நீங்கள் எனக்கு உணவு கொடுக்கவில்லை;
தாகமாயிருந்தேன், என் தாகத்தைத் தணிக்கவில்லை. 43 நான் அன்னியனாய்
இருந்தேன், நீங்கள் என்னை ஏற்றுக் கொள்ளவில்லை. நோயுற்றிருந்தேன்,
சிறையிலிருந்தேன், என்னைக் கவனித்துக் கொள்ளவில்லை "என்பார். 44
அதற்கு அவர்கள், "ஆண்டவரே, எப்பொழுது நீர் பசியாகவோ, தாகமாகவோ,
அன்னியராகவோ, ஆடையின்றியோ, நோயுற்யோ, சிறையிலோ இருக்கக்
கண்டு உமக்குத் தொண்டு செய்யாதிருந்தோம்?" எனக் கேட்பார்கள். 45
அப்போழுது அவர், "மிகச் சிறியோராகிய இவர்களுள் ஒருவருக்கு நீங்கள்
எதையெல்லாம் செய்யவில்லையோ அதை எனக்கும் செய்யவில்லை என
உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்" எனப் பதிலளிப்பார்.

(மத். 25:31-45)

பசியுற்றோருக்கு உணவும் ஆடையற்றோருக்கு ஆடையும் அளித்து வந்தேன். என் இனத்தாருள் இறந்த யாருடைய சடலமாவது நினிவே நகர மதில்களுக்கு வெளியே எறியப்பட்டிருக்கக் கண்டால், அதை அடக்கம் செய்துவந்தேன்.

*(தோபி. 1:17)*

கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் போது அனைவரும் இறுதித்தீர்ப்புக்கு உள்ளாக்கப்படுவது பற்றி மேலே தரப்பட்ட திருவிவிலியப் பகுதி எமக்கு எடுத்துக் காட்டுகிறது. நாம் மேற்கொள்ளும் இரக்கச் செயல்களே எமது இறுதித் தீர்ப்பின் போது எம்மை அளக்கும் அளவுகோல்களாக இருக்கின்றன. கத்தோலிக்கர் என்ற வகையில் இறை கட்டளைகளைக் கடைப்பிடித்தால் மட்டும் அனைத்தும் நிறைவடையமாட்டாது. இறையாட்சியை உரிமையாக்கிக் கொள்ள வேண்டுமெனில் ஆன்ம, உடல் சார்ந்த இரக்கச் செயல்களை நாம் மேற்கொள்ள வேண்டும்.

ஒருவருடைய உடல்சார்ந்த நன்மை கருதியே உடல்சார்ந்த இரக்கச் செயல்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

### உடல் சார்ந்த இரக்கச் செயல்கள் - 7

1. பசித்தோருக்கு உணவு கொடுப்பது
2. தாகமாயிருப்போருக்கு குடிக்கச் கொடுப்பது
3. உடையற்றோருக்கு உடை கொடுப்பது
4. அனாதைகளுக்கு இல்லிடம் அளிப்பது
5. நோயாளரைத் தரிசிப்பது
6. சிறையிலிருப்போரை தரிசிப்பது
7. இறந்தோரை அடக்கம் செய்வது

ஒருவருடைய ஆன்ம நலன் கருதியே ஆன்மா சார்ந்த இரக்கச் செயல்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

### ஆன்மீக இரக்கச் செயல்கள் 7

1. அறிவற்றோருக்குக் கற்பிப்பது
2. ஐயமுற்றோருக்கு நம்பிக்கை ஊட்டுவது
3. துன்பப்படுவோருக்கு ஆறுதல் கூறுவது
4. பாவிகளை மனம் திருப்புவது

5. நிந்தைகளை பொறுமையோடு சகிப்பது

6. குற்றங்களை மன்னிப்பது

7. வாழ்வோருக்காகவும் இறந்தோருக்காகவும் செபிப்பது

மனிதனுடைய ஆன்மீக இரக்கச் செயல்களால் ஆன்மீக தேவைகள் நிறைவேறுகின்றன. எமது அறிவு, ஆற்றல்கள், திறமைகள், விருப்புக்கள், ஆசைகள், எண்ணங்கள், கருத்துக்கள் என்பவற்றை மற்றவர்களோடு பகிர்ந்துகொள்வதன் மூலம் அவர்களையும் நிறைவுள்ளவர்களாக்க முடியும்.

ஆன்மீக இரக்கச்செயல்கள் உடல் சார்ந்த இரக்கச் செயல்களைவிட உயர்ந்தவையாகும். எனவே எல்லா இரக்கச்செயல்களையும் நாம் மேற்கொள்ள வேண்டும். கிறிஸ்தவ அன்பு ஓர் உணர்வுக்கோ அல்லது அனுதாபத்துகோ வரையறுக்கப்பட்டதல்ல, மாறாக, அந்த அன்பு செயலில் வெளிப்படுத்தப்பட வேண்டும். அதுபற்றி தூய யாக்கோபு இவ்வாறு கூறுகிறார்.

*ஒரு சகோதரன் அல்லது ஒரு சகோதரி போதிய உடையும் அன்றாட உணவும் இல்லாதிருக்கும்போது, அவர்கள் உடலுக்குத் தேவையானவை எவற்றையும் கொடாமல் உங்களுள் ஒருவர் அவர்களைப் பார்த்து, 16 "நலமே சென்று வாருங்கள்; குளிர் காய்ந்து கொள்ளுங்கள்; பசியாற்றிக் கொள்ளுங்கள்;" என்பாரென்றால் அதனால் பயன் என்ன?*

*(யாக். 2:15-16)*

உடல் சார்ந்த இரக்கச்செயல்கள் மூலம் மனிதனுடைய அடிப்படைத் தேவைகள் நிறைவுசெய்யப்படுகின்றன. உணவு, நீர், உடை, இல்லிடம், நோய், துன்பத்தில் ஆறுதல் என்பன மனிதனை மனிதனாக வாழ வைக்க இன்றியமையாதவையாகும். நம்மில் பசியால் வாடுவோருக்கு, அநாதைகளுக்கு, நோயாளருக்கு, சிறைப்பட்டோருக்கு உதவியிருக்கிறோமா என்பதை அடிப்படையாகக் கொண்டே எம் ஒவ்வொருவருடைய நித்திய வாழ்வின் விதி தீர்மானிக்கப்படும் என கிறிஸ்து கற்பிக்கின்றார். அத்தகையோருக்கு உதவுவோர், அவர்களுடைய அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்வோர் முழுமனுக்குலத்திற்கும் அரசராகிய கிறிஸ்து இயேசுவுக்கே பணி செய்கின்றார்கள்.

**செயற்பாடு**

1. ''இறையாட்சியை இரக்கச்செயல்களில் முறையாக ஈடுபடவேண்டும்'' என்ற தலைப்பில் கத்தோலிக்க பத்திரிகைக்கு கட்டுரை ஒன்று வரைக.
2. உமது நலனுக்கு இடையூறு செய்பவர் அல்லது உம்மைத் துன்புறுத்துபவர் மட்டில் நீர் செய்யக்கூடிய ஆன்மீக இரக்கச்செயல்கள் இரண்டினை விளக்குக.
3. அண்மையில் ஏதெனும் ஓர் இயற்கை அனர்த்தத்தினால் துன்புற்றவர்களுக்கு நீர் செய்த அல்லது செய்யக்கூடியதாக இருந்த உதவி பற்றி 100 சொற்கள் அளவில் விபரிக்குக.

**வாழ்க்கைக்கு**

தினமும் ஆன்மீக, உடல் சார்ந்த இரக்கச்செயல்களில் ஈடுபட முயற்சி செய்க. நீர் செய்த இரக்கச் செயலுக்காக மாலைச்செபத்தில் இறைவனுக்கு நன்றி கூறுக.